**செய்தி வெளியீடு**

**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செ.வெ.எண்.65** **நாள் : 02.04.2025**

**மதிப்பிற்குரிய துணை மேயர் திரு.மு.மகேஷ்குமார் அவர்கள் கோடம்பாக்கம் மண்டலத்திற்குட்பட்ட பாண்டி பஜாரில் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சி திட்டப்பணிகள் குறித்து இன்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.**

பெருநகர சென்னை மாநகராட்சி, கோடம்பாக்கம் மண்டலம், தணிகாசலம் சாலை, பாண்டி பஜாரில் உள்ள பன்னடுக்கு தானியங்கி வாகன நிறுத்தத்தின் செயல்பாடுகளை மதிப்பிற்குரிய துணை மேயர் திரு மு. மகேஷ் குமார் அவர்கள் இன்று (02.04.2025) பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, அதன் செயல்பாடுகள் குறித்து கேட்டறிந்தார்.

இதனைத் தொடர்ந்து, மதிப்பிற்குரிய துணை மேயர் அவர்கள் பாண்டி பஜாரில் உள்ள நடைபாதை வணிக வளாகத்தினைப் பார்வையிட்டு, அதனை மேம்படுத்துவது குறித்து அலுவலர்களுடன் கலந்துரையாடி அறிவுரைகளை வழங்கினார்.

இந்த ஆய்வுகளின்போது, துணை ஆணையாளர் (பணிகள்) திரு.வி.சிவகிருஷ்ணமூர்த்தி, இ.ஆ.ப., மண்டலக்குழுத் தலைவர் திரு.எம்.கிருஷ்ணமூர்த்தி, மாமன்ற உறுப்பினர் திரு.கே.ஏழுமலை, மேற்பார்வை பொறியாளர் (பூங்கா) திரு.டி.அன்பழகன் மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.

**வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**